**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 85/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | பாஸ்கர் |
| Father's Name/Husband Name: | பெருமாள் |
| Village : | தேனூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். என்னுடைய அப்பா பெருமாள் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு 16 சென்ட் இடத்தை அன்பழகன் மற்றும் பெரியசாமிக்கு தலா 8 சென்ட்டு வீதம் விற்றுவிட்டார். எதிரி அன்பழகன் 2 சென்ட் இடத்தை ஆக்கரிமித்து விட்டார். அந்த 2 சென்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி இடத்தை சர்வேயர் வைத்து அளக்க முயற்சி செய்த போது எதிரிகள் அளக்க விடாமல் பிரச்சனை செய்து வந்தார்கள்.

சுமார் 9 வருடங்களுக்கு முன்பு இரவு 7 மணியளவில் வீட்டிற்கு வெளியே நான் நின்று கொண்டு இருந்த போது நான்கு எதிரிகளும் என்னை அடித்தால் யாரும் கேட்க மாட்டார்கள் என்று மிரட்டி, குச்சியால் நான்கு எதிரிகளும் என்னை அடித்தார்கள். என் மனைவியையும் நான்கு எதிரிகளும் தென்னை மட்டையால் இடது

கையில் அடித்தார்கள். அதன்பிறகு நானும் என் மனைவியும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் மருத்துவமனை வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மீது குன்னம் காவல் நிலைய குற்ற எண் 683/2017 என்ற வழக்கு பதிவு செய்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் அன்பழகன் மற்றும் பெரியசாமி பிரச்சனைக்குறிய நிலத்தை வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றாலும் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் எதிரிகளின் தந்தை தங்கராசு, குழந்தைவேல் ஆகியோர் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அவர்கள் எனது அப்பாவிடம் வாங்கினார்கள். 8, 8 சென்ட் நிலத்தை அளக்க அதிகாரிகள் வந்தார்களா என்றால் வந்தார்கள் சரியாக அளக்கவில்லை. நிலத்தை சரியாக அளக்கவில்லை என்பதற்காக மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை. இந்த நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு போட்டேனா என்றால் ஞாபகமில்லை.

நீதிமன்ற ஆணையுடன் நில அளவியர் மூலம் நிலம் அளக்கப்பட்டது என்றால் இல்லை. சென்னை உயர் நீதிமன்ற உதவியுடன் நிலம் அளக்கப்பட்டது என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் Writ Petition நான் தான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் உயர்நீதிமன்ற உத்தரவுபடி, காவல் ஆய்வாளர் , குன்னம் வருவாய் வட்டாச்சியர் மற்றும் குன்னம் தலைமை நில அளவையர் உதவியுடன் நிலத்தை அளந்து காட்டினார்களா என்றால் சரியாக அளக்கவில்லை. அதற்காக நீதிமன்றத்தில் மனு ஏதேனும் போட்டேனா என்றால் இல்லை. நான் விற்ற தலா 8 என்ற 16 சென்ட் நிலத்தில் மட்டும் தான் எதிரிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகள் 2 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்ததாக சொல்லியுள்ளதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. எதிரிகள் அவர்களுக்குறிய 16 சென்ட் நிலத்தில் இருப்பதால் தான் 2 சென்ட் ஆக்கிரமித்ததாக சொல்லப்படும குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல.

நான் சிகிச்சைக்காக சென்ற மருத்துவரிடம் சம்பவமானது மெயின் ரோட்டில் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மருத்துவரிடம் என்னை ஊரே கட்டி அடித்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் எங்களை தாக்கியது 5 நபர்கள் என்றும் புகாரில் 4 நபர்கள் என்றும் முரண்பட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது நிலுவையில் உள்ள வழக்கான C.C.4/2018 என்ற வழக்கில் புகார்தாரரான சின்னப்பிள்ளை என்பவருக்கு சம்பவத்தன்று 80 வயது முதியவர் என்பதாலும், நான் தாக்கியதில் அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டு விட்டது என்பதாலும், அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிலத்தை சர்வேயர் வைத்து அளந்ததற்கான ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரிதான். நிலத்தை அளக்க மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நிலத்திற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.